# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.. 160/2019 தேதி-18.03.2026

(.D.W.3) .நிர்மலா

<u>குறுக்கு விசாரணை</u>

எனது தாத்தா பூவையன் நாடாருக்கு 12 3/4 சென்ட் சொத்து உரிமைப்பட்டதாகும். எனது தாத்தாவிற்கு 3 ஆண்பிள்ளைகள் ஆகும். எனது தாத்தாவின் இறப்பிற்கு பின்பு 3 மகன்களும் சமபங்கு எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். எனது தந்தையின் பெயர் ஆசீர்வாதம் ஆகும். எனது தந்தை இறந்து 37 வருடம் ஆகிறது. எனது தந்தை இறக்கும் முன்பு அவரது பங்கு 4 1/4 சென்ட் சொத்து சம்பந்தமாக எந்த ஆவணமும் யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அம்மாவின் பெயர் தெரசம்மாள் ஆகும். எனது அப்பா இறந்த பின்பு எனது அம்மா தெரசம்மாளும் என்னுடன் பிறந்தவர்கள் 6 பேருக்கும் சமபங்கு உண்டு என்றால் சரிதான். மேற்படி 6 பேரும் சேர்ந்து எனது அம்மாவும் சேர்ந்து 4 1/4 சென்ட் சொத்து சம்பந்தமாக எந்த பாகமும் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் ஒருவர் மட்டும்தான் எனது தகப்பனாருக்கு பெண் பிள்ளையாகும். எனது தகப்பனார் இறந்து 6 மாதம் கழித்து 1990 ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. எனது அப்பாவிற்கு 4 1/4 சென்ட் சொத்து தவிர 50 சென்ட் சொத்தும் இருந்தது. 50 சென்ட் சொத்தை அனைவரும் சம பங்காக எனது அப்பா இறந்த பின்பு பிரித்துக்கொண்டோம். எனக்கு திருமணத்தின்போது நகை கொடுத்து திருமணம் செய்ததால் மேற்படி 50 சென்டில் எனக்கு எந்த பாகமும் ஒதுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்தபின்பு எனது திருமண செலவிற்காக வேறு ஒரு சொத்தை விற்கவேண்டியிருந்தது அதற்காக என்னுடன் பிறந்தவர்கள் எந்த ஆட்பேசணையும் தெரிவிக்கவில்லை. நான் திருமணத்திற்கு பிறகு எனது கணவர் வீட்டில்தான் தாமசித்து வருகிறேன். நான் திருமணம் முடிந்து போன பிறகு 4 1/4

சென்ட் சொத்தில் எனக்கு பங்கு வேண்டுமென்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான்.

எனது அப்பா இறந்தபின்பு எனது அம்மா தெரசம்மாளும் எனது சகோதரர்கள் 5 பேரும் மற்றும் நானும் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். எனது அம்மா கிறிஸ்துதாசிற்கு ஆவணம் எழுதிக்ெகாடுக்கும்போது என் உடன்பிறந்த மற்ற சகோதரர்கள் அவர்களது பங்கை விட்டுக்கொடுத்து எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் எழுத்துப்பூர்வமாக எழுதிக்கொடுத்தார்கள் என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. எனது அம்மா கிறிஸ்துதாசிற்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ-1 ஆவணத்தில் எனது அம்மா அவரது கணவர் இறந்தபின்பு அவரது ஒரே வாரிசாக இருப்பதால் அவர் மேற்படி சொத்தை கிறிஸ்துதாசிற்கு எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அம்மா கிறிஸ்துதாசிற்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்திடவில்லை. எனது சகோதரர்கள் சாட்சி கையெழுத்திட்டுள்ளார்கள்.

பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் வாதி சாட்சியல்ல என்றால் சரிதான். நான் சாட்சி சொல்ல வரும்முன் வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்துப்பார்த்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமாக பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் வாதியின் பெயரும் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். எனது அம்மா கிறிஸ்துதாசிற்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை பற்றி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புதான் தெரியும் 2001ஆம் ஆண்டு அதுபற்றி தெரியாது என்றால் சரியல்ல. வாதிக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். அவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் வாழை விவசாயம் செய்து வருகிறார்.

பி.வா.சா.ஆ. 8 வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சர்வே நம்பர் சொத்து அல்ல ஆனால் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட வேறொரு சொத்தாகும். பி.வா.சா. 8 ஆவணம் எனது

தந்தை ஆசீர்வாதம் நாடாருக்கு உரிமைப்பட்டதல்ல. ஆசீர்வாதம் நாடாருடைய சகோதரர் ஜோசப்புக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். ஜோசப்பின் மனைவி பெயர் செல்லம் மற்றும் தாய். குழந்தைகள் 11 பேர். பி.வா.சா.ஆ- 8 ஆவணத்தை மேரி சரோஜினிபாய் மற்றும் ஜாண்சன் ஆகியோர்கள் சேர்ந்து செல்வதாசிற்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான்.

பூவேல் நாடாரிடமிருந்து எனது அப்பாவின் சகோதரரான ஜோசப்பிற்கு கிடைத்த 4 1/4 சென்ட் சொத்திலிருந்துதான் மேற்படி பி.வா.சா.ஆ. 8 ஆவணத்தை ஜாண்சன் மற்றும் மேரி சரோஜினிபாய் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 8 ஆவணத்திற்கும் வழக்கு பட்டிகை சொத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரிதான். வாதி திருமணம் ஆகாமல் இருப்பதாலும் பேச்சுவார்த்தை இல்லாமல் இருப்பதாலும் வாதிக்கு எதிராகவும் என்னுடன் நல்ல உறவு முறையில் இருக்கும் மற்ற சகோதரர்களுக்கு ஆதரவாக வந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அம்மா வாதிக்கு எந்த பங்கும் கொடுக்காமல் இந்திய வாரிசுரிமை சட்ட பிரிவுகளுக்கு எதிராக கிறிஸ்துதாசிற்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளது சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் அல்ல அந்த ஆவணத்தின் அடிப்படையில் கிறிஸ்துதாசிற்கு வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமாக வாதி எந்த விடுதலை ஆவணமும் எழுதிக் கொடுக்காததால் எந்த உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.